
# திராவிடத்தால் வாழ்கிறோம்

1128

எழுத்து: கோவி.லெனின்
ஓவியம்: கி.சொக்கலிங்கம்




- வாழ்வோம்

# 'மைனாரிட்டி' தி.மு.க.

**மரு.எஸ்.ஏ.எஸ்.ஹபிசுல்லா**

53

தி.மு.க.வுக்கும் சிறுபான்மையினருக்குமான உணர்வுபூர்வமான உறவையும் உரிமைச் செயல்பாடுகளையும் விவரிக்கும் தொடர்



# கழகம் - இஸ்லாமியர்களை காக்கும் அரண்!

அரசியல் கண்ணோட்டத்தோடு அல்லது பின்புலத்தோடு வெளியாகும் திரைப்படங்கள் மூலம் விதைக்கப்படுவது வெறுப்பாக இருந்தாலும் நல்லிணக்கமாக இருந்தாலும் அல்லது எதுவாக இருந்தாலும் மக்களிடையே சமூக பொதுப்புத்தியில் கட்டியெழுப்பப்படுவதை அவை ஆழமாக உறுதிசெய்கின்றன. அந்த சமூக பொதுப்புத்தியின் தாக்கங்களால் ஒட்டுமொத்த இந்தியாவிலும் தமிழ்நாட்டிலும் என்ன நடந்திருக்கிறது, நடக்கிறது என்பதை கடந்த வாரங்களில் பார்த்தோம். தமிழ்நாட்டின் நல்லிணக்கச் சூழலும் தமிழ்நாடு தவிர்த்த இந்தியாவின் வெறுப்பு மனநிலையையும் திரையில் மட்டுமல்ல, நிஜத்திலும் கடந்த 80 ஆண்டுகளாக அவ்வப்போது வெளிச்சமிட்டிருக்கின்றன.

### வகுப்புவாதப் படுகொலை

சுதந்திர இந்தியாவைப் பொறுத்தமட்டில் இஸ்லாமியர்களுக்கு எதிரான வன்முறை என்பது எக்கச்சக்கமாக நடந்திருக்கிறது. 1948-இல் ஹைதராபாத் சமஸ்தானத்தை இந்தியாவுடன் இணைப்பதற்காக நடத்தப்பட்ட 'ஆபரேஷன் போலோ' (Operation Polo) ராணுவ நடவடிக்கைக்குப் பிறகு, இஸ்லாமியர்களுக்கு எதிராகப் பெரிய அளவில் அங்கு வன்முறை வெடித்தது. இந்திய இராணுவத்தின் ஆக்கிரமிப்பு விரைவாக இருந்ததோடு ஒப்பீட்டளவில் சில உயிரிழப்புகளை மட்டுமே ஏற்படுத்தியிருந்தாலும், அதைத் தொடர்ந்து ஏற்பட்ட வகுப்புவாதப் படுகொலை இன்னும் கொடூரமானது என்று 'தி பாசிங் ஆஃப் பேட்ரிமோனலிசம்' என்ற நூலில் ஜெர்மன் அறிஞர் மார்கரெட் பெர்னாவ் பதிவு செய்துள்ளார். பல்லாயிரக்கணக்கான முஸ்லிம்கள் அப்போது படுகொலை செய்யப்பட்டனர்.

1961-இல் மத்தியப்பிரதேச மாநிலம் ஜபல்பூரில் ஒரு மதக்கலவரம் வெடித்தது. தனிநபர்கள் மீதான குற்றவியல் வழக்கு, அவர்களின் தொழில்-பொருளாதாரப் பின்னணி காரணமாகக் கலவரமாகத் திட்டமிட்டு மாற்றப்பட்டது. தனிநபர் மீதான குற்றச் சாட்டை, மதத்தோடு தொடர்புபடுத்தி, உள்ளூர் ஆர்.எஸ்.எஸ். ஆதரவு இதழ் ஒன்று செய்தி வெளியிட்டது. அந்தச் செய்தியின் அடிப்படையில் 1961 பிப்ரவரி 4-ஆம் தேதி அன்று காலையில் ஆர்.எஸ்.எஸ்.ஸின் மாணவர் அமைப்பான ஏ.பி.வி.பி. மாணவர்களைக் கொண்டு ஊர்வலம் நடத்தியது. அந்த ஊர்வலம் கலவரத்தில் முடிந்தது. 5-ஆம் தேதி, இராணுவம் நிலைமையைக் கட்டுக்குள் கொண்டு வந்தது. ஆனால், 7-ஆம் தேதி, இராணுவம் திரும்பப் பெறப்பட்ட பிறகு, இஸ்லாமியர் குடியிருப்புகளுக்குள் நுழைந்து தாக்குதல்கள் நடத்தப்பட்டன. கடைகள் அடித்து நொறுக்கப்பட்டன. 55 முஸ்லிம்கள் கொல்லப்பட்டனர். அடுத்து, 1969-இல் குஜராத் மாநிலம் அகமதாபாத்தில் ஏற்பட்ட ஒரு சிறிய மோதல் மிகப் பெரிய வன்முறையாக மாறியது. செப்டம்பர் முதல் அக்டோபர் வரை நீடித்த இந்த வன்முறையில் 500-க்கும் மேற்பட்டோர் கொல்லப்பட்டனர். இதில் பெரும்பாலானோர் இஸ்லாமியர்கள்.

1983-இல் அசாமில் நடைபெற்ற சட்டமன்றத் தேர்தலில், வங்காளத்தில் இருந்து புலம்பெயர்ந்த இஸ்லாமியர்களுக்கும் இந்திரா காந்தி அரசால் வாக்குரிமை வழங்கப்பட்டது. இதனால் ஆத்திரமடைந்த உள்ளூர் மக்கள், குடியேறிய இஸ்லாமிய மக்களுக்கு எதிராக வன்முறையில் இறங்கினர். மத்திய அசாமில் உள்ள அலிசிங்கா, குலபதர், பசுந்தாரி, புக்தூபா பீல், புகுபாபா ஹபி, போர்ஜோலா, புட்டுனி, டோங்காபோரி, இந்தூர்மரி, மாடிபர்பத், முலதாரி, மாத்தி பர்பத், சில்பெட்டா, போர்பூரி மற்றும் நெல்லி, நகாமோ ஆகிய கிராமங்களில் பிப்ரவரி 18 காலையில் இருந்து தொடர்ந்து ஆறு மணி நேரம் இஸ்லாமியர்களுக்கு எதிராகத் தாக்குதல் நடத்தப்பட்டது. 2,191 பேர் உயிரிழந்தனர். அதிகாரபூர்வமற்ற இறப்புக் கணக்கோ 10,000 தாண்டியதாகக் கூறப்பட்டது.

> சிறுபான்மையினர்மீது தாக்குதல் நடைபெற்றபோதெல்லாம், மக்கள் மன்றத்தில் நீதி கேட்டுள்ளனர் தலைவர்கள். நாடாளுமன்றத்தில் அதற்கு எதிராகக் குரல்கொடுத்துள்ளது கழகம். பக்கம் பக்கமாக எழுதி இருக்கிறார் முத்தமிழறிஞர் கலைஞர்.

இந்த நெல்லி படுகொலை தொடர்பான அதிகாரபூர்வ விசாரணையை திவாரி கமிஷன், அறிக்கையாகச் சமர்ப்பித்தது. 600 பக்கங்கள் கொண்ட இந்த அறிக்கை 1984-ஆம் ஆண்டில் அசாம் அரசாங்கத்திடம் சமர்ப்பிக்கப்பட்டது. ஆனால், இந்த அறிக்கை, இன்றுவரைக்கும் பாதுகாக்கப்பட்ட இரகசியமாகவே உள்ளது.

இப்படி நாடு முழுவதும் பல்வேறு மாநிலங்களில், பல்வேறு விதமான தாக்குதல்களுக்கும் அடக்குமுறைகளுக்கும் இஸ்லாமியர்கள் உள்ளாகியுள்ளனர். குறிப்பாக, 1987-ஆம் ஆண்டு, உத்தரப்பிரதேச மாநிலத்தின் மீரட் வகுப்புவாதக் கலவரத்தின்போது, மீரட் அருகே 42 முஸ்லிம்கள் காவல் துறையால் சுட்டுக் கொல்லப்பட்டனர். ஹாஷிம்புரா மொஹல்லாவைச் சேர்ந்த இந்த ஆண்களைச் சுற்றிவளைத்து, புறநகர்ப் பகுதிக்கு அழைத்துச் சென்று, அவர்களைக் கொடூரமாகச் சுட்டுக் கொன்று, அருகிலுள்ள நீர்ப்பாசனக் கால்வாயில் வீசினர். சில நாட்களுக்குப் பிறகு, இறந்த உடல்கள் கால்வாயில் மிதப்பது கண்டு பிடிக்கப்பட்டது. ஹாஷிம்புரா படுகொலை என்றே வரலாற்றில் இந்த கொடுஞ்சம்பவம் பதிவாகியிருக்கிறது.

அதேபோல, 1989-இல் பீகாரின் பகல்பூரில், சுமார் இரண்டு மாதங்கள் நீடித்த வன்முறையில், 1,000-க்கும் மேற்பட்டோர் கொல்லப்பட்டனர். இதில் 90 சதவிகிதத்துக்கும் அதிகமானோர் இஸ்லாமியர்கள். பாபர் மசூதிக்குப் பதிலாக அயோத்தியில் ராமர் கோயில் கட்டுவதை நோக்கமாகக் கொண்ட ராம ஜென்மபூமி பிரச்சாரத்தின் ஒரு பகுதியாக, விஸ்வ இந்து பரிஷத் (VHP) பாகல்பூரில் ஓர் ஊர்வலத்தை ஏற்பாடு செய்தது. அயோத்தி ராமர் கோயிலுக்கு செங்கல் சேகரிப்பதற்காக நடத்தப்பட்ட அந்த ஊர்வலம்தான் பகல்பூர் வன்முறைக்கு வித்திட்டது. அதேபோல பாபர் மசூதி இடிக்கப்பட்ட பின்பு, மும்பையில் மிகப் பெரிய கலவரம் வெடித்தது. அதில் 900-க்கும் மேற்பட்டோர் உயிரிழக்க நேர்ந்தது.

### பெரும் கலவரங்கள்

2002-இல் கோத்ரா ரயில் எரிப்பு சம்பவத்தைத் தொடர்ந்து குஜராத் முழுவதும் பரவிய வன்முறையில், ஆயிரத்துக்கும் மேற்பட்ட முஸ்லிம்கள் கொல்லப்பட்டனர், வீடுகள் தீக்கிரையாக்கப்பட்டன. உடைமைகள் சேதப்படுத்தப்பட்டன. 2013-இல் உத்தரப் பிரதேசத்தின் முசாபர் நகரில் வெடித்த கலவரத்தில் 62 பேர் கொல்லப்பட்டனர். 50,000-க்கும் மேற்பட்டோர் இடம்பெயர நேரிட்டது. இப்படி, சுதந்திர இந்தியாவின் ஒவ்வொரு 10 ஆண்டுகள் இடைவெளியில் இஸ்லாமியர்களுக்கு எதிரான பெரும் கலவரங்கள் வெடித்திருக்கின்றன. அவற்றின் பின்னணியில் திரியாக ஏதேனும் ஒரு காரணம் இருந்திருக்கிறது அல்லது திட்டமிட்டு உருவாக்கப்பட்டிருக்கிறது. இந்தக் கலவரங்கள் வழியாக சங் பரிவாரங்கள் வலிமைப்பட்டிருக்கின்றன. பெரும்பான்மைவாதத்தைத் தூண்டி இருக்கின்றனர்.

குறிப்பாக, இந்திய சுதந்திரத்துக்குப் பிறகான அரசியல் வரலாற்றில், இந்தக் கலவரங்களின் வரலாறும் வட இந்திய மாநிலங்களில் அரசியல் தாக்கங்களை ஏற்படுத்தியுள்ளன. ஆனால், இந்த பெரும்பான்மைவாத அரசியல் தமிழ்நாட்டில் புறக்கணிக்கப்படுவதற்குக் காரணம், திராவிட இயக்கம் ஜனநாயகத்தின்மீது கொண்டிருந்த நம்பிக்கை. ஜனநாயகத்தை வலுப்படுத்துவதற்கான திராவிட இயக்கத்தின் குரல், வரலாறு நெடுகிலும் பதிவாகியுள்ளது. சிறுபான்மையினர்மீது தாக்குதல் நடைபெற்றபோதெல்லாம், மக்கள் மன்றத்தில் நீதி கேட்டுள்ளனர் தலைவர்கள். நாடாளுமன்றத்தில் அதற்கு எதிராகக் குரல் கொடுத்துள்ளது கழகம். பக்கம் பக்கமாக எழுதி இருக்கிறார் முத்தமிழறிஞர் கலைஞர். கழகம் சிறுபான்மையினருக்கு என்றைக்கும் அரணாக நிற்கும் என்பதற்கு அந்த எதிர்வினைகளே சாட்சியாகும்.

...நீளும்

## தமிழ்நாட்டின் உணர்வுக்கு ஓர் ஆவணப்படம்!

திருப்பரங்குன்றம் மலையை வைத்து, இந்து மதவாத அமைப்பினர் மக்களின் இயல்பு வாழ்க்கையில் நெருக்கடிகளை உருவாக்கிக் கொண்டிருக்கும் நிலையில், அரசின் உறுதியோடு அந்த சதிகளை தமிழ்நாடு முறியடித்து வருகிறது. சங் பரிவார்களின் சூழ்ச்சியை மக்களும் ஜனநாயக சக்திகளும் எதிர்த்து நிற்கின்றனர். இப்படியான சூழலில், 'அறக்கலகம்' யூடியூப் சேனல் சார்பில், தவம் மற்றும் தமிழ்தாசன் ஆகியோரின் இயக்கத்தில் வெளிவந்துள்ள 'திருப்பரங்குன்றம்' என்கிற ஆவணப்படம் கவனத்தை ஈர்த்துள்ளது. தமிழ்நாடு முழுவதும் பல இடங்களில் இந்த ஆவணப்படம் திரையிடப்பட்டுவருகிறது.

திருப்பரங்குன்றம் மலை தொடங்கி இந்து முஸ்லிம் ஒற்றுமை வரை அனைத்தையும் அலசும் இந்த ஆவணப்படம் குறித்து ஊடகவியலாளர் மில்டன் முகநூலில் குறிப்பிடுகையில்,

"கோயிலுக்குப் பின்னாடி உள்ள தர்கா, அதற்கு தினமும் ஊதுபத்தி வைத்து வழிபடும் கோயில் பூசாரி."

"கோயிலுக்குத் தேங்காய் உடைக்கிற மக்கள், தர்காவுக்குப் படைக்கிற நேர்த்திக்கடன்."

"சிக்கந்தர் என பெத்த புள்ளைகளுக்குப் பேர் வைக்கிற மதுரைக்கார இந்து குடும்பங்கள்."

"திருப்பரங்குன்றத்தில் நீ சிரித்தால் முருகா..." என்கிற பாடலை சந்தனக்கூடு நிகழ்ச்சி மேடையில் பாடச்சொல்லி, கீழே உட்கார்ந்து கோரஸா திரும்பப் பாடும் இஸ்லாமியர்கள்."

இப்படி, பலவற்றையும் நேர்மையோடு பதிவு செய்துள்ள படம் என விளக்குகிறார். தமிழ்நாட்டின் ஒற்றுமை உணர்வு தொடர, 'திருப்பரங்குன்றம்' ஆவணப்படமும் உதவட்டும். படத்தை இந்த இணைப்பில் காணலாம்.

## ஃப்ளாஷ்பேக்



### மிசா காலத்தில் தலைவர் சூட்டிய பெயர்!



கோ.வீரமணி

2015-ஆம் ஆண்டு, என் பேரன் அபினேஷுக்கு தலைவரிடம் வாழ்த்துப் பெற விரும்பி, கோபாலபுரம் சென்று தலைவரை சந்தித்தேன். மிசா காலத்தில், சீர்காழி முன்னாள் நகரச் செயலாளர் வை.சி.மணி அவர்கள் தலைமையில், தனிப்பேருந்தில் குடும்பமாக வந்து தலைவரைக் கண்டோம். அப்போது, என் பெண் குழந்தைக்கு, கண்ணகி என்று பெயர் சூட்டினார் தலைவர். 'அந்தக் கண்ணகியின் மகன் தான் தலைவரே இவன்' எனப் பேரனை அறிமுகம் செய்தேன். ஏறிட்டுப்பார்த்து அவர் முறுவலித்தது மறக்க முடியாத நினைவு.

**- கோ.வீரமணி,**
**விளந்திடசமுத்திரம், ஒன்றிய அவைத் தலைவர், சீர்காழி மேற்கு, மயிலாடுதுறை.**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018.
வாட்ஸ்அப் எண் : 82204-51520
மின்னஞ்சல்: murasolipaasarai@gmail.com

## நம் வரலாறு — திருச்சி மாநாடு தீர்மானம்!

நல்வருக

1956-ஆம் ஆண்டு, மே மாதம், திருச்சியில் கழகத்தின் இரண்டாவது மாநில மாநாடு நான்கு நாட்கள் நடைபெற்றது. மாநாட்டின் இறுதி நாளில் 33 தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. 33-வது தீர்மானமாக, அடுத்து வரும் பொதுத்தேர்தலில் திராவிட முன்னேற்றக் கழகம் போட்டியிட வேண்டும் என்று இம்மாநில மாநாடு முழுமனதோடு தீர்மானிக்கிறது என்றது. தீர்மானத்திற்கு முன், வாக்கெடுப்பு நடத்த முடிவு செய்யப்பட்டது.

RNI 1244/57 - Postal Reg.No.MA/43/2024-2026.Licenced to post under without pre payment of postage vide No.TN/WPP-94/SR/2024-2026 Published by Karthikeyan Shanmugasundaram on behalf of Murasoli Trust from No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 and Printed by D.Karthikeyan at Dinakaran Press, No.2/2, Melur Main Road, Uthangudi, Madurai - 625 107. Editor: Karthikeyan Shanmugasundaram, Regn.No.7436, Ph:044-2817 9191, 2817 9131 Fax: 2817 9292.